எ - து. ஆறறிவார் - ஆறறிந்து மோக்ஷமடையப் போகிறார்,—எல்லா மகன்ற நெறியருளும் - மூப்பத்தாறு கருவிகளும் நீங்கும்படி பண்ணிச் சாயுச்சியமான வீட்டைக் கொடுக்கப்பண்ணின,—போறிவான் வாராதபின் - மகத்தாகிய சிவஞானத்தையுடைய சிவன் வாராதபோது.

நி - வ - உ. மந்திரமுதல் கலையீறாகிய மூவிரண்டு அத்துவாவுங்கடந்த வீட்டுநெறியினை வெளிப்படுத்தும் நிறைந்தஞானத்தினையுடைய இறைவனே, குருவுருக்கொண்டு வாராதவிடத்து, அதனை அறியவல்லார்யார். ஒருவருமில்லை யென்பதாம்.

இதனால் நிறைந்த அறிவனாகிய இறைவனே உருக்கொடுவரினல்லது உண்மையையுணர்தல் கூடாதென்பது கூறப்பட்டது. (கூ)

இவர் வேறுமுந்தாராக வரவேண்டுமோ என்னறிவிலேயிருக்கிறது போதாதோ வென்னில்?

ஞான மிவனெழிய நண்ணியிடுநற்கலநற்
பாணு வொழியப் படின்.

எ - து. ஞான மிவனெழிய நண்ணியிடும் - இவன் ஞானசாரியனாக வாராமல் ஞானம் பிரகாசிக்கும்,—நற்கல நற்பாணு

வொழியப்படின் - நல்ல சூரியகாந்தக் கல்லினிடத்திலே யாதித்தனில்லாம லக்கினியுண்டாகின்.

இவ்விரண்டு மப்படியாகா தென்பது கருத்து.

நி - வ - உ. அருள்வடிவாகிய குரவனையன்றி யொருவற்கு ஞானமுண்டாதல்கூடும், ஆதித்தனலன்றி மாசிலாச் சூரியகாந்தக் கல்லினிடத்து நெருப்புத்தோன்றுமாயின். இரண்டுமில்லையென்பதாம்.

இதனால் திருவடிஞானம் குரவனையின்றியமையாச் சிறப்பிற்றென மேலதுவலியுறுத்தப்பட்டது. (அ0)

அருளுருநிலை முற்றிற்று.

சூ - வது. அறியுநெறி.

அஃதாவது, உண்மைப்பொருளையுணரு முறைமை. அருளுருநிலைகூறி அதனை லறியும்பொருளுரைத்தமை கூறுதலின், மேலைய திகாரத்திறுதி இதற்கியைய புணர்மையறிக.

அவைப்போது குருவாவா ரென்னில்?

நீடு மிருவினைக ணேராக நோதல்
கூடுமிறைசத்தி கொளல்.

எ - து. நீடு மிருவினைகள் - மிகுத்த புண்ணிய பாவங்களிரண்டும், — நேராக நோதல் - துலையொத்தவிடத்து, — கூடுமிறைசத்திகொளல் - கத்தா திருமேனிகொள்வர், அப்போசத்தி பதியும்.

நி - வ - உ. ஒன்றையொன்றுவ்வாது மிக்குவளர்ந்துவரும் புண்ணியபாவங்களிரண்டும் தம்மிலொப்பாகவரும் பருவத்திலே யுண்டாகும், சிவனுடைய சத்திபதிதல்.

நேராக நோதல், ஓர் புண்ணியத்துக் கோர்பாவமோர் வகை யாலெனைத்திருத்தலாம். அதுவன்றி வாக்குமனங் காய மென்னு மூவகையா லியற்றப்பட்ட புண்ணியங்கள் மூழுவது மோர்பங்கும், பாவங்கள் மூழுவது மோர்பங்கு மாகப், பொன் னும் இரும்பும் கன்மத்தாற் றுலையொக்கத் தூங்குதல்போலப், பலத்தாற் சமனுதல். சத்தி பதிதலாவது, நிலையாத வியல்பினை யுடைய வுலக நடையினையஞ்சி வீட்டுநெறியினை விரும்பும் வண்ணம் உயிர்கள தணர்வினைத் திருந்தச் செய்தல். ஒன்றை யொன் றேற்றத் தாழ்வுபடில் அவையவை யிகல்செய்திழுக்கு மென்பதாம்.

இதனு ளுண்மை வுணர்தற் கேதுவான சத்திபதியு மெல் லுகூறப்பட்டது. (க)

கத்தா திருமேனிகொண்டுவந் தென்னத்தை யறிவிப்பா னெனில்?

ஏக னனேக னிருள்கரு மாயையிரண் டாகவிவை யாணு தியில்.

எ - து. ஏகன் - கத்தாவும்,—அனேகன் - ஆன்மாவும்,—இருள் - ஆணவமலமும்,—கருமம் - கன்மமலமும்,—மாயை யிரண்டு - சுத்த மாயை யசுத்தமாயையும்,—ஆகவிவை - ஆக விந்தவா றுபொருளும்,—அணுதியில் - அணுதியிலே யுண்டான தென் றறிவித்தார்.

நி - வ - உ ஒருவனுகிய இறைவனும், அளவில வாகியவு யிர்களும், இருள்வடிவாகிய ஆணவமலமும், கன்மமலமும், சுத் தமசுத்தமென்னு மிருவகை மாயைகளுமாகிய இப்பொருள் கள் ஆறும் அணுதியாகிய பொருள்கள்.

அனேகன் என்பதில் ஈற்றுமகரம் னகரமாய்த் திரிந்து நின்றது. இவையாறுமென அஃறிணை வாசகங்கொண்டு மிக

வினல்முடிந்த திணைவழுவமைதி. ஆறுமென்னு மூற்றும்மை செய்யுள்விகாரத்தாற் றொக்கது.

இதனுல் நித்தியப்பொருள்க ளிவையெனத் தொகுத்துக் கூறப்பட்டன. (உ)

அனுதியாகி லாறுபொருளினு மறிவ தேதெனில்?

செய்வானுஞ் செய்வினையுஞ் சேர்பயனுஞ் சேர்ப்பவனு மூய்வா னுளனென்ற றுணர்.

எ - து. செய்வானும் - கன்மத்தைச் செய்யப்பட்ட வான்மாவும்,—செய்வினையும் - செய்யப்பட்ட புண்ணியபாவமும், —சேர்பயனும் - புண்ணிய பாவத்துக் கேதுவாகிய சுகதுக்கமும்,—சேர்ப்பவனும் - இந்தக் கன்மத்தைக் கூட்டிப் புசிப்பிக்கப்பட்ட கத்தாவும்,—உய்வானுளனென்றுணர் - இம்மூதல்லா மறிந்து பிழைக்கிறவனுன்மா.

நி - வ - உ. புண்ணிய பாவங்களைப் பண்ணும் புருடனும், அவனுற் செய்யப்படும் வினைகளும், அவற்றின் பயனுகிய இன்பதுன்பங்களும், அவற்றைக் கூட்டியருத்துமிறைவனு மென்னுமிந்நான்கு திறத்தினையுடையனுக வுண்மையறிவாயாக. மாணவகனே! நீ கதிசேர்தற்பொருட்டு.

இவை யுணராதிருக்கவே யானனெதன்னுஞ் செருக்கனுது பிறவித்துன்ப மூறுமென்பதாம். உடையனுதல் இருவினைகளைச்செய் திறைவனு லவற்றின்பயனை நுகர்தற்குந் தானுரியனுதல். (ஊ)

உய்வான் முனேயறிவதே வென்னில்?

ஊனுயிரால் வாழு மொருமைத்தே யூனெடுயிர்
தானுணர்வோ டொன்றுந் தரம்.

எ - து. ஊனுயிராலவாழு மொருமைத்தே - சரீரமானது ஆன்மாவினாலே யொருபடித்தாய் சீவிக்கிற முறைமைபோல், —ஊனெனுமியிர் - இந்தச் சரீரத்தேயிருக்கிற வான்மாவும்,— தானுணர்வோ டொன்றுந்தரம். இந்தத் திருவருளினாலே சீவித்து நிற்கிறது மித்தன்மைத்து.

நி - வ - உ. உடம்பானது உயிரோடுகூடிப் பிரிப்பின்றிக டைபெறு மொற்றுமையினே யுடைத்து. அவ்வுடம்போ டுயிர்க ணிறைந்த ஞானத்தோடுகூடி யொன்றுபட்டு வேறற நிலைபெ றுந் தகுதியன. உடலகத்துயிர்போலக் கலந்துநின்று நடத்து மென்பதாம்.

உடம்பென்ற பொதுவகையால் ஐவகையுடம்பு மடங்கும். அவையடங்கவே நிலமுதல் நாதமீறுகிய தத்துவமெல்லா மடங்குமெனக் கொள்க. (சு)

அகுனோற் காரியப்படுத லெப்படி யென்னில்?

தன்னிறமும் பன்னிறமுந் தானுங்கற் றன்மைதரும்
பொன்னிறம்போன் மன்னிறமிப் பூ.

எ - து. தன்னிறமும் - படிகந் தன்னுடைய பிரகாசத்தை யும்,—பன்னிறமும் - பஞ்ச வன்னங்களினுடைய விளக்கத் தையும்,—தானுங்கற் றன்மைதரும் பொன்னிறம்போல் - இவ்விரண்டையுங் கூட்டிக் காரியப்படுத்தப்பட்ட வாதித்தப் பிரகாசத்தைப்போல,—மன்னிறமிப்பூ - கத்தாவினுடைய திரு வருளுஞ் சித்துக்கறிவும் சடத்துப் பிரேரகமாயிருக்கிறது மித் தன்மைத்து.

நி - வ - உ. அடுத்த பலவன்னங்களையுங் கவர்தலும், அ வையடுத்திருக்கினுந் தன்னிறமேகாட்டி நிற்றலுமாகிய படிகத் தினதுதன்மை யிரண்டிற்கும் தான் காரணமாகிநின்று பண்

ணும் சூரியன் கிரணம்போலாம், இவ்வுலகிற்கு இறைவனது சுடராகிய ஞானசத்தி.

கட்டுவீடென்னு மிரண்டிற்குந்தானென்றே காரணமென்பதாம்.

இவை மூன்று பாட்டானும் இறைவ னுலகினை நடத்துமாறு கூறப்பட்டது. (ரு)

அருளால் காணவேண்டுவதில்லை நானே காண்பனென்னில்?

கண்டொல்லை காணுநெறி கண்ணுயிர்நாட்டமணைவி
யுண்டில்லை யல்லா தொளி.

எ - து. கண் டொல்லைகாணுநெறி-சிக்கிரமதிலே காணப்படுவது,—கண் - கண்ணுறுவ மொளிவினக்கானது; கண்ணுறுக்கும் பதார்த்தத்துக்கு நடுவே பிரகாசித்தாற் கண்ணுனதுபதார்த்தத்தைக்காணும்,—உயிர் நாட்டமணைவியுண்டு - ஆன்மாவுக்கு நேயத்துக்கு நடுவே யருள் பிரகாசித்தா லான்மா நேயத்தைநட்பெறுகிறதுண்டு,—இல்லையல்லாதொளி - ஒளியாகிய திருவருள் பிரகாசியாதபோது நேயமே விளங்காது.

நி - வ - உ. நினைவினையுடைய வுயிரினது நடுவாக ஞானவொளிக்கு நிலையுண்டாதல் வேண்டுமென்றுயிர் வாயில்வழியாற் புலன்களை யுற்றுப்பார்த்து விஷயவினைரு மூறலைமையில்லை.

நடுவாகநிற்றல் கலந்து நிற்றல். இதனால் ஞானமுன்னிற்பினல்லது அறிதல் கூடாதென்பதோ ராறுபவுவலையால் விளங்கக் கூறப்பட்டது.

இது குறளலென்றி யுனைகொண்டுணர்த லரிதெனக் (சுர)
கொள்க.

அரனருளாற் காணுஞ்செய லென்போல வென்னில்?

புன்செயலி லேறுமம் புலன்செயல்போ னின்செய
மன்செயல தாக மதி. [ஐ

எ - து. புன்செயலிலேறும் புலன்செயல்போல் - ஆன்மா பஞ்சேந்திரியங்களிலேலே யொருவிடயத்தை யறிகிற முறைமைபோல,—நின்செயலே - உன்னுடைய செயலையும்,—மன் செயலதாகமதி - நிலைபெற்ற திருவருளிலே காரியப் படுகிறேமென் றறிவாயாக.

நி - வ - உ. புருடனது சிறுதொழிலின் வழியே நிரியின்றி நடக்குமித்திரியங்களது செயல்போல, மானவகனே! நின்னுடைய செய்தியையும் இறைவனது நியாசத்திவழியே யவ்வாறு நடப்பதாகக் கருதுவாயாக. அவ்வாறு கருதவே வினைத்தொடர்பின்றிப் பிறவிநீங்கி நிற்பனென்பதாம்.

இதனை விறைவனது செயல்வழி நிற்றல் கூறப்பட்டது.

அருளாற் செயற்பட்டறிவ தெதென்னில்?

ஓராதே யொன்றையுமுற் றுன்னுதே நீமுந்திப்
பாராதே பார்த்ததனைப் பார்.

எ - து. ஓராதே - ஒன்றையும் விசாரியாதே கேவலத்திலும்,—ஒன்றையுமுற் றுன்னுதே - சகலத்திலும் நீ யொன்றையு நினையாதிருக்கச் செய்தேயிரு,—நீமுந்திப்பாராதே - சுத்தத்திலு நீ யதுவிதுவென்று சுட்டிப்பாராதே,—பார்த்ததனைப்பார் - இந்த வுன்றவத்தையிலு மதுவதுவாக வருவிக்கப் பட்ட திருவருளையே காண்பாயாக.

நி - வ - உ. ஞான மெவ்வண்ண மிருக்குமோவென் றாராயாமல், அதனையும் விடயங்கள்போலக் குறிக்கொண் டின்றி

னையாமல், நீயாகமுன்சென்று மேற்கொண்டு காண்டலுஞ் செய்யாமல், உன்னைக்கண்ட ஞானத்தினைக் காண்பாயாக.

இவ்வா றசைவின்றி நிற்கவே அவ்வகண்டமாகிய ஞானந் தானே தோன்றுமென்பது கருத்து. (அ)

அப்படித் திருவருளை யெதிரிட்டுப் பார்க்கி லெனக்குச் சந்தோஷம் வருமே யென்னில்?

களியே மிகுபுல னைக்கருதி ஞான
வொளியே யொளியா வொளி.

எ-து. களியே மிகுபுலனைக் கருதி-அந்தச்சந்தோஷமே மிகுத்தவிடயமாக நினைத்து, — ஞானவொளியே யொளியா வொளி - ஞானமாகிய பிரகாசமே மறைவாக ஒளித்து நிற்பா யாக.

நி-வ-உ. இத்தன்மையவாகிய ஞானத்தினைக் காணப் பெற்றமையால், வருமகிழ்ச்சியைப் பெரியவிடயமாக நினைந்து ஞானமாகிய வொளியன்றி வேறுனைக்கோ ரொளியின்றுகும் படி அதனுட் புக்குக்கரந்து நிற்பாயாக.

கரந்துநிற்றல் விகற்பமறக் கூடிநிற்றல். (கூ)

என்று மிலையிழந்துநிற்கிற தெப்படி யென்னில் ?

கண்டபடி யேகண்டு காணுமை காணுமை.
கொண்டபடி. யேகொண் டிருரு.

எ-து. கண்டபடியேகண்டு - திருவருளைத் தரிசித்த படியே தரிசித்து,—காணுமை காணுமை - சகல கேவல நீங் கினபடியே நீங்கி,—கொண்டபடியே கொண்டிருரு - திருவரு ளுன்னைக் கருத்துக் கொண்டபடியே நீயுமசைவற நிற்பாயாக.

நி-வ-உ. ஞானமான தினக்கு யாதொருபடியே வெளிப்பட்டது, அப்படியே நீயும் கண்டறியாமையாகிய அதீதா

வத்தைவந்து தோன்றுமல், யாதொருபடி யுன்னை விழுங்கிற் றப்படியேனீயும் விழுங்கக் கொடுத்திருப்பாயாக.

இம்மூன்றுபாட்டானு ஞானத்தினைக்காணுமாறும், கண் டாலதனுட்கலக்குமாறும், அவ்வழித் தன்னை அதன் வயத்த னைக்குமாறும் கூறப்பட்டன. மாணவகனேயென்ப திம்மூன் றிற்குங் கூட்டி யுரைக்கப்பட்டது. (க0)

அறியுறெறி முற்றிற்று.

எ - வது. உயிர் விளக்கம்.

அஃதாவது ஆன்மசுத்தி பண்ணும்படி அறியுறெறியிற் கூறியவாற்றான் அறிந்தபடிநின்று யானெனதென்னுஞ் செருக் கறுத்தல் கூறினமையின், மேலையதிகாரத்திலே டிதற்கியை புடைத்தெனக் கொள்க.

கொண்டபடி கொள்வ தெக்கால மென்னில் ?

தூநிழலார் தற்காருஞ் சொல்லார் தொகுமிதுபோற் றூனதுவாய் நிற்குந் தரம்.

எ - து. தூநிழலார் தற்காருஞ் சொல்லார் பவுத்திரமாகிய தன்னுடையநிழல் ஆதித்தன் மத்தியத்திலேவந்தாற் றனக்குள் ளேயடங்கிநிற்கிறதற்கு யாருஞ் சொல்ல வேண்டியதில்லை,— தொகுமிதுபோல் - இத்தழுறைமைபோல,— தானதுவாய்நிற் குந்தரம் - இருவினை யொப்புவந்தா லான்டா திருவரு—ாஞய் நிற்கிதற்கு மியாருஞ்சொல்லவேண்டுவதில்லை.

நி - வ - உ. கோடையான்வெதும்பிறேன் குளிர்ந்தநிழலை யடைதற்கு அடைதியென வொருவருஞ் சொல்லார், தானே வினைவினைடையுந் தன்மையினை யொக்கும் ; மாயாவிகார வெம்

கஅ

மையான் வருந்திலே லெருவன். தானவ்வருளினையடைந் தநுவாய்நிற்குமுறைமை.

உலகவெறுப்பினல்லது அருளினை யடைதல் கூடாவென்பதாம்.

இதனை லருளினையடைதற்கு வநுகூறப்பட்டது. (ச)

எல்லார்க்குமொக்க விந்தத்திருவரு ணில்லாது லென்னினில்?

திந்திக்கும் பாருறுவங் ணைக்குந் திருந்திலாடப்
பிந்தத்தின் ருன்றவிர்ந்த பின்.

எ - து. திந்திக்கும் பாருறுவம் ணைக்கும்-பிந்த மேலிட்ட பொழுது திந்திக்கிறபாலுங் கசக்கும்,—திருந்தில காப்பிந்தத் திற் ருன்றவிர்ந்த பின் - திருந்தமாகவறிகிற காலிலே பிந்த நீங்கினபோது கசந்தபாலுந் திந்திக்கும். அதுபோல வானை வமல மேவீட்டிறலே ருருவிங்க சங்கமத்திலே யானையுறப் பன்னுறும், அந்த வானைவமல நீங்கினபோது ருருவிங்க சங்க மத்திலே விருப்பமுண்டாம்.

நி - வ - உ. ருற்றுங்நீர்ந்த காவானது பிந்துகோபினிவ் றும் தான் நீங்கினபின்னர் முன்னைகத்தபாலும் திந்திக்கும் அதுவேனத்தானுங் கண்டறியும்.

மலவிருள் நீர்ந்தபின்னர் முன்னங் நிரோபவித்து நின்ற மருளும் அருள்வடிவாகி லெளிப்படும், அதுவேயபிர்களுங் காணுமென்பது வொருள். மாசுநீரின்னிலையுங்கித் தோன்றுங் ருன்மை யினையுடையது உயிரென்பதும்பு வுலகிற்கு இதுவேனத் திருந்திற காவென்றருளிச்செய்தார். இதுவும் தொடர்ன்றை மலங்காரம்.

இதனை லருள்வெளிப்படுங் காலமும், உயிர் அதனைத்திருந் திக் காணுங்காலமு மொன்றென்பது கூறப்பட்டது. (உ)

அறியாமைநீங்க வறிந்தவ ரெனன்னில்?

காண்டா லெளியிருளிற் காட்டிடவுங் கான்கண்ட வீண்டாவ மெங்ஙாள் விழும்.

எ - து. காண்பா லெளியிருளிற் காட்டிடவும் - காணப் பட்ட வான்மாவுக்குத் திருவருளான தாணுவமலத்தைநீக்கி சேயத்தைக்காட்டச்செய்தேதயும்,—கான்கண்ட வீண்டாவ மெங் ஙாள்விழும் - கான்கண்டேனென்கிற பாவ மெந்தச்சாதத்திலே கள்ளுரோமா ?

நி - வ - உ. ஒளிவடிவாகிய ஞானம், தன்னைக் கண்டறி தற்பொருட்டு மலவிருளிலே மருண்டுகிடக்கின்ற வுயிர்கட்குத் தன்னை வெளிப்படுத்தவும், அதனைகாடாது உயிர் தானேகாண் பதாகக் கண்டமையாலே வறிதேதவருந் பாவமென்னபயனைச் செய்ததாய்வந்து முற்றும்.

ஓர் புலனுணர்வான் வரும் பாவம்போலாது வாளா வரு தலின் வீண்டாவமென் றருளிச்செய்தார்.

பித்தம் பாலானன்றி மற்றொருன்றுங் தீராவாறுபோல, மலமும் அருளாலன்றிப் பிறிதொன்றால் தீராதென்பதாமும், அருள் மறைந்துநில்லாது வெளிப்பட்டுநிற்பினும் அங்ஙனத்தை வகான்டல்போலத் தானே கான்டல் கூடாவென்பதாமும், இதனாட் கான்டற்கிடந்தவாறு கண்டுகொள்க.

இதனால் அருளோடுகூடின் கான்டற்கான் முற்றுமுடைத் தென்பது கூறப்பட்டது. (ஈ)

தெளிந்தார் செயலுந் தெளியாதார் செயலு மெப்படியோ வென்னில்?

ஒளியு மிருளு மொருமைத்துப் பன்மை
தெளிவு தெளியார் செயல்.

எ - து. ஒளியுமிருளு மொருமைத்து படலமுடைய கண்ணுக்கு ஆதித்தப்பிரகாசமும் பூதவிருளு மொருபடித்து,—பன்மை - இந்தமுறைமைபோல,—தெளிவு தெளியார்செயல்-மல மாயா கன்ம மேலிட்ட பேர்க்குப் பாசமும் பதியுமொரு படித்தாய் விளங்காநிற்கும்.

கி - வ - உ. பலவாய பொருள்கடம்பண்மைதான்றூது ஒருபடித்தா யிருத்தல் ஒளியின்கண்ணும் இருளின்கண்ணு மொக்கத் தெளிந்து நிற்றலும் மருண்டு நிற்றலுமாய செயல்கள் அவ்விடத்துப்பேதம்.

இதனு லருளோடுகூடி நிற்றல் ஒருவகையா லிருளோடு கூடிநிற்றல்போலு மென்பது கூறப்பட்டது. பிறிதான்றுந் தோன்று தென்பது கருத்து. (சு)

தெளிந்தறிந்துகூடுவ தெல்லார்க்குந்தரியுமோவென்னில்?

கிடைக்கத் தகுமேமற் கேண்மையார்க் கல்லா
லெடுத்துச் சுமப்பானே யின்று.

எ - து. நற்கேண்மையார்க்கல்லால் - நல்ல கேள்வியினையுடைய நாதாக்களுக்கேயல்லாமல், — எடுத்துச் சுமப்பானே - எல்லாப்பதார்த்தத்தையுஞ் சுமந்தச் சுமக்கிறசிவனே,—இன்று-இப்பொழுது,—கிடைக்கத்தகுமே கிடைக்குமே கிடையாதேபின்னே.

கி - வ - உ. நல்ல கேளினை யுடையார்க்குத் தம்மேல் பாரமுழுதுஞ் சுமந்தச் சுமக்குமொருவனே யிப்போழுதே கிட்டுதல் கூடுமோ.

நற்கேண்மையென் றருளிச்செய்தார் அருளோடு கூடிய தென்பதற்கு.

இதனால் அருளாகுங்கேண்மையினையுடையாற்குத் தன்னை யடைந்தார் வினைகளெல்லாம் அவனைத் தொடராது தன்செய லாகக் கொள்ளு நேயம் வெளிப்படுதல் எளிதென்பது கூறப் பட்டது.

" சிவனு மிவன்செய்தி யெல்லாமென்செய்தியென்றும் செய்தனெனக் கிவனுக்குச் செய்தனென்றும், பவமகலவுடனுகி நின்றுகொள்வன் பரிவார் பாதகத்தைச் செய்திடினும் பணி யாக்கிவிடுமே " என்றருளிச் செய்தவாறுகாண்க. (ரு)

எடுக்கிறவனெருத்தன் சுமக்கிறவனெருத்தனே, எல்லாம் பிரமந்தானே யென்னில் ?

வஞ்சமுடனெருவன் வைத்த நிதிகவரத்
துஞ்சினையோ போயினையோ சொல்.

எ - து. வஞ்சமுடனெருவன் - வஞ்சகமாக வொருவன், —வைத்தநிதிகவர - வைத்த திரவியத்தை யெடுத்துக்கொள்ள வைத்தவன்வந்துகேட்க வில்லையென்ன,—துஞ்சினையோ போ யினையோசொல்-தூங்கிநின்றான் கிடந்தாயோ இவ்விடம்விட்டுத் தான்போனையோ சொல் ? அப்படிப்போலச் சிவன் தனு கரண புவன போகங்களைக் கொடுத்திருக்கவும், கொடுத்தவன்றனை குருவிங்கசங்கமமாய்வந்து என்னுடைமையைத்தா வென்று கேட்க, இல்லையென்றுசொல்லிக் கொடுத்தவனை மறைக்கையி னுலே நீ பிரமமல்ல அடிமை.

நி - வ - உ. ஒருவன் சேமித்த பொருளினை ஒருவன் காவி னுல் கவர்ந்துகொண்டேக, மற்றவனுறங்குதல் செய்தானே, அவ்விடம் விட்டுநீங்குதல் செய்தானே, மாணவகனே ? சொல் வாயாக.

அதுபோலக் கேடின்றி நிறம்பிநிற்கு ஞானசத்தியினை வஞ்சித்து அதன் முதலாயவேஞயத்தினை யுடைத்தாதல் அரி தென்பது இதனுற் கூறப்பட்டது.

இதுவும், முன்னதுவும் ஒட்டென்ஞு மலங்காரத்தாற் கூறப்பட்டன. துஞ்சினனேயோ போயினனேயோ என்பதனை துஞ்சினனேஞ போயினனேஞ எனப் பாடமுளைத்து ஊங்ஙுதல் செய்தானேஞ அவ்விடம் விட்டு நீங்குதல் செய்தானேஞ என உளைகூறினர் நிரம்ப வழகியர். (சு)

இப்படி யடிமையாகிய ஞானவானிடத்திலே மலங்கள் வராதோ வென்னில் ?

தனக்கு நிழலின்ஞு மொளிகளைருந் தம்ப
மெனக்கவர நில்லா திருள்.

எ - று. தனக்கு நிழலின்ஞு மொளிகளைருந் தம்பமென ஆதித்த ஞுச்சியிலே வருகிறபோது படைத்தும்பமானது படிந்த வன்னங்கவராமை லாதித்தன்ஞுரையும் நின்றதுபோல, — கலை நில்லாதிருள் - ஆன்மாவுக் கிருவினையொப்பு மலகன்மபாகம்வந்து வவுகரத்திலருள்பிரகாசிக்கவே பஞ்சமலங்களையும்பொருந்தாமலருளேநிகழ நிற்பது மிப்படியேபோல.

நி - வ - உ. தனக்கென வேஞ்ஞானி தானன்ஞுகவென்னணம் ஞாயிறுநிரணைத்தாற் கவர்ந்துகொள்ளுந் படைத்தானன்போல ஆன்மா தன்னுடையதோடாகத்தானன்ஞு நின்றும் வென்னணம் அருள் கவர்தலைச்செய்யுமாயின் அந்நிலையே யிருளானது தன்பால் நிலைபெறுதுநீங்கும்.

ஞாயிறு கிரணத்திஞுள்ளே தன்னைக் கொடுத்து நிற்கும் படிகம்போல ஆன்மாவுந் தன்னையருளிஞுள்ளேகொடுத்து நிற்றல் வேண்டு மென்பதாம்.

இந்நூல் ஆன்மாவை அருள் தன்வயத்தாக்குமாறு கூறப் (எ)
பட்டது.

மலந்தோன்றுமு மருளோடிகழ்நிற்ப தெப்படியென்னில்?

உற்றைதருஞ் பொற்றை யுடையவர்போலுன்மைப்பி
னிற்க வருளார் நிலை.

எ - து. உற்றைதருஞ் பொற்றை யுடையவர்போல்-பொலி
விணையுடைய கையிலே விளக்கைப்பிடித்து முன்னிட்டுப்
போனவர், நிலைத்த பதார்த்தங்களை யெடுப்பார்கள்,—உன்
மைப்பினிற் கலருளார்நிலை - ஆன்மாவருளை முன்னிட்டுக்கொ
ண்டு நிற்குமே தெயத்தைப் பொருந்துவன்.

கி - வ - உ. தழற்கொள்ளியினைப் பிடித்திருக்கு மழகிய
கையினையுடையோர், தாம்வேண்டிய பொருள்களைக் காணுமள
வும் அதனைமுன்னிட்டுத் தாம் பின்னிற்கு மாறுபோல, நூய
மானது வெளிப்படுமளவும் அருளைத் தமக்கு முன்னுக்கித் தாம்
அதன்பின்னிற்றலே யருளோடு பொருந்திநிற்கு நிலையாவது.

இதனாலருளோடு பொருந்திநிற்குமுபாயங்கூறப்பட்டது.

அருளேயறியும், யானறிய வேண்டுவதில்லை யென்னில்?

ஐம்புலனுற் றுன்னுன்ட னொன்று லதுவொழிய
வைம்புலனுள் தாமா றுற்று.

எ - து. ஐம்புலனுற் றுன்னுன்டனொன்று லதுவொழிய - ஆன்
மா பஞ்சேந்திரியங்களினூலே யொருவிடயத்தை யறிகிறதல்லா
மல்,—ஐம்புலனுள் தாமாறுற்று - இந்திரியங்களான்மாவுக்குவிட
யங்களை யறிவிக்கிறதல்லாமலிந்திரியங்களுக்குக் கறியதேவனென்ப
தில்லை, அப்படிப்போல வான்மா திருவருளினூலே தெயத்தைப்
பொருந்துகிறதல்லாமல் திருவருளுக்குக் கறியதேவனென்பதில்லை

நிசு திருவருட்பயன் மூலமுமுரையும்.

நி - வ - உ. மெய் வாய் கண் மூக்குச் செவிகளால் தாம் கண்டறிந்த விடயங்களுள் ஒன்றல்லவாயின், அவ்வருளானே யன்றிப் பேரின்பமாகிய நேயத்தினை யடைதற் கவ்வைவம் பொறிகள்தான் ஆர் ? உயிர்கள்தாம் ஆர் ?

சுட்டுறுத்து நின்றமையா லிவர்க் கடைதற் குரிமையில்லை யென்பார் ஆனென்றருளிச்செய்தார். (கூ)

அருள் காட்டவேண்டுவதில்லை, தானேகாண்பவனெனில்?

தாமே தருமவனைத் தம்வயி னிற்கருதல்
லாமே யிவனு ரதற்கு.

எ - து. தாமேதருமவனை - ஒருத்தன் றயவினாலேகொடுக்கக் செய்தே,—தம்வயினிற்கருதல் - தம்முடைய வலிமையினாலே பறித்தாற் கொடாது,—ஆமே - அப்படிப்போல,—இவனுரைதற்கு - திருவருளானது தன்னுடைய திருவையினாலே நேயத்தைக் காட்டாநிற்க வான்ம போதத்தாலே நேயத்தைப் பொருந்தப் போகாது.

நி - வ - உ. ஒருபொருளினை யொருவற்குத் தாமே கருத்தாகநின்று விரும்பித்தருதற்கு உரியானைத் தம்வலியால் தந்தவராகநினைத்தல் முறைமையன்றே, ஆதலால், அவ்வருளாற்பெறும் பேரின்பத்திற்கு அப்பெற்றியினையடைய நிற்கும் இவன் யார்.

இவை யிரண்டுபாட்டானும் பேரின்பமாவ தருளாலே யன்றிக் காரணங்களோடு கூடியும் தனித்தும் உயிர்களால் அடையப்படா தென்பது கூறப்பட்டது. (கூ)

உயிர்விளக்கமுற்றிற்று.

நிசு திருவருட்பயன் மூலமுமுரையும்.

நி - வ - உ. மெய் வாய் கண் மூக்குச் செவிகளால் தாம் கண்டறிந்த விடயங்களுள் ஒன்றல்லவாயின், அவ்வருளானே யன்றிப் பேரின்பமாகிய நேயத்தினை யடைதற் கவ்வைவம் பொறிகள்தான் ஆர் ? உயிர்கள்தாம் ஆர் ?

சுட்டுறுத்து நின்றமையா லிவர்க் கடைதற் குரிமையில்லை யென்பார் ஆனென்றருளிச்செய்தார். (கூ)

அருள் காட்டவேண்டுவதில்லை, தானேகாண்பவனெனில்?

தாமே தருமவனைத் தம்வயி னிற்கருதல்
லாமே யிவனு ரதற்கு.

எ - து. தாமேதருமவனை - ஒருத்தன் றயவினாலேகொடுக்கக் செய்தே,—தம்வயினிற்கருதல் - தம்முடைய வலிமையினாலே பறித்தாற் கொடாது,—ஆமே - அப்படிப்போல,—இவனுரைதற்கு - திருவருளானது தன்னுடைய திருவையினாலே நேயத்தைக் காட்டாநிற்க வான்ம போதத்தாலே நேயத்தைப் பொருந்தப் போகாது.

நி - வ - உ. ஒருபொருளினை யொருவற்குத் தாமே கருத்தாகநின்று விரும்பித்தருதற்கு உரியானைத் தம்வலியால் தந்தவராகநினைத்தல் முறைமையன்றே, ஆதலால், அவ்வருளாற்பெறும் பேரின்பத்திற்கு அப்பெற்றியினையடைய நிற்கும் இவன் யார்.

இவை யிரண்டுபாட்டானும் பேரின்பமாவ தருளாலே யன்றிக் காரணங்களோடு கூடியும் தனித்தும் உயிர்களால் அடையப்படா தென்பது கூறப்பட்டது. (கூ)

உயிர்விளக்கமுற்றிற்று.

நஅ இருவருட்பயன் மூலமுமுளனாயும்.

இதனற் பேரின்பத்தை யெய்துவா ரிவரென்பது கூறப் பட்டது. (க)

அருளேடோதாதோ, அதற்குமேலாகியபேயபேயபோனால்?

இருவர் மடந்தையருக் கென்டயனின் டுன்டா
மொருவ னெருத்தி யுறின்.

எ-து. இருவர் மடந்தையருக் கென்பயன் - நானன்ன ஸ்திரீகளுங்கூடினு லின்பமில்லை, — நின்புன்டாபொருவ னெருத்தியுறின்-ஒருவனு மொருத்தியும் கூடினு லின்பமுண்டா ஆன்மா நேயத்தைக் கூடுமிடத்துப் பேரின்பமாகிய போகமு முண்டாம்.

நி-வ-உ. இரண்டுபேர் மகளிர்க்குருத்தம் புணர்ச்சியாஸ் வரும்பயனென்னை? ஓர் புருடனு மோர் மகளுருத்தம்பிற் புணர் வாராயினன்றே யின்பமுண்டாவது.

உயிர்க்கும் அருட்கு மூதலாயநேயம் வெளிப்படாவன்று இன்பமுண்டாகா தென்பதுபொருள். ஒருவனெருத்தியென் னும் உலமம் தலைமையும் தன்மையும் பற்றிவைத்தது. நூற்கிவ் வாறன்றி யுயிரினைப் பெண்ணியல்பினதாகவும் நூலாரை யாணியல்பினதாகவும் அறிவில்லார் கூடியமாறு பொருளன்று, அன்னவியற்கை அசேதனவடிவிற்கல்லது சேதனவுடம்பிற் கின்மை மூதலான்-

இதனற் பேரின்பத்தினையெய்து வரென்பது கூறப்பட்டது.

ஆன்மா நேயத்தைக் கூடுமிடத்து நூலாரைச்சேர் வோர்க்கு மின்பமுண்டோ வென்னில்?

இன்பதுகின வெய்துவார்க் கீயு மவர்க்குருவு
மின்பகன மாதலினு லில்.

எ - து. இன்பதனை யெய்துவார்க் கீயும் - இன்பத்தைதுப் பெறவேணு மென்றவர்களுக்குக் கொடுப்பர், — அவர்க்குருப மின்பகனமாதலினால் - அந்தச்சிவனுக்குப் போன்பமே கொருப மாகையினாலே இன்ப மொருவர் கொடுக்கவேண்டிய தில்லை.

நி - வ - உ. தன்னைவைத் தடையுமவர்க்குப் போன்பத்தினை வழங்கும் அவ்விறைவன் தனக்கு வடிவம் ஆகாமையாதலால், தான் தன்னை நுகர்வதில்லை.

அதனினே யானவாலத்தால் மறைப்புன்ற அதுகீங்கி யிப்பொழுது கவமாகவைத்துப்போலக் கருதுமுயிர்கள்போலாது, இறைவன் அதனி மலமுதற்றலைவன் அதுவில்லை யென்றுரு வாக்கி வைப்பதால். பூதிகாக வைத்தன்றன்ட துரு கருத்து.

இதனை யுயிர்களுக்குக் கொடுப்பதன்றி யிறைவன் தானு மன்னின்பத்தினை நுகர்வதேனென்னுத் சான்றையினை யாகற்றிக் கூறப்பட்டது. (க)

அந்தியமாயிருக் தன்னின்ப மதுமனிப்பதேனு வென்னெனில்?

தாட லேதோற் கூடியனை தானெரிகழா வேற்றின்டத்
கூடலேர் பெயதெனைக் கொளல்.

எ - து. தாடலேதோற் கூடியனை - னாவைத் தன்னைத் தோன் றுனைமே டன்னாயிற்றுயதோலை, — தானெரிகழா வேற்றின்டத் கூடலை - நற்தோடாருத்த நிலையாதனிடத்திலே வினங்கப்பட்ட தோரிச்சடத்தினை, — நீயெகவெனைக்கொளல்வேண்டும் - நீ வியாண்டு மறைவோற் றலைவாயாக.

நி - வ - உ. தான் தனியவியல்புற்ற வசாண்மியாண்டும் தம் வியாருவர் பிரிந்து சென்றுழுது வியாருந்நியாவாறுபோல், பூணர்ச் சிக்க வென்றுருவாறு முன்னர்டாகாது சேற்றுனையிலாது பிரிச்ட

னையுமுடைய கலப்பினையிறைவனே டொன்றுத லெனக்கொள் வாயாக மாணவகனே !

அச்சொற்கள் ஓரொருகாற் பிரிதலும், புணர்வாற் ரும்டெ றும்பயனின்மையுங் கருதி, யிவை யன்னவல்லவென்பதற்கு நிகழாவேற்றின்பக் கூடலென் றருளிச்செய்தார். தாளுந்தலையு மென்னுஞ் சொற்களாற் கூறியது, உயிரினது தாழ்வு மிறை வனது உயர்வுங் காட்டுதற்காம்.

இதனால் ரோயத்தழுந்தி யொன்றுபட்டு நிற்குநிலை கூறப் பட்டது. (சு)

பின்னம் எகம்பெரு என்னில் ?

ஒன்றாலு மொன்று நிரண்டாலு மொசைபெறா தென்றாலு மோரிரண்டு மில்.

எ - து. ஒன்றாலு மொன்றாது - ஆன்மாவுஞ் சிவனுமொன் றென்று சொல்லுவாயென்னில் அப்பொழுது பெறுவானும் பேறுமில்லை,—இரண்டாலு மோசைபெறா தென்றாலும் - ஆன் மாவுஞ் சிவனு மிரண்டென்று சொல்லுவாயென்னில் ஆன்மா வுஞ் சிவனு மேகத்துவமாகிய சாயுச்சியமு மில்லையென்றும். இப்படியாகையினாலேயோ,—ஓரிரண்டுமில் - துவிதாத்துவித மில்லை.

நி - வ - உ. இறைவனையு முயிரினையு மொன்றென்போ மாயினும் பின்னர்ப் பொருந்தவேண்டுவதில்லை, இரண்டென் போமாயினுந் தம்முட்டாக்கியவென விபெழுதலைச்செய்யாது, ஆதலா லொருபொருளுமல்ல விரண்டாவது மில்லை.

இதனு விறைவனையும் உயிரினையுமேக மென்பானையு மிரண்டென்பானையு மறுத்து அத்துவிதங் கூறப்பட்டது. அத் துவிதமாவது தம்மிற் கலப்பா லாகுங்கியமா யிருத்தல். (ரு)

கூடிப்பொருந்துங் கொள்கை யாதா மென்னில் ?

உற்றாரும் பெற்றாரு மோவா துணையொழியப்
பற்றாரு மற்றார் பலம்.

எ - து. உற்றாரும் - அந்தப் பொருளைப் பொருந்தினே னென்கிறவர்களாலும்,—பெற்றாரும் - அந்தப்பொருளைப் பெற் றேனென்கிறவர்களாலும்,—ஓவாது - கூடாது,—உளையொழிய- இந்தவிரண்டவசனமு நீங்க,—பற்றாரும் - இந்தப்பற்றுக்க ளற் றவரோ,—அற்றார்பவம் - அவர்களே சகல மரணங்களை நீக்கி நிட்டையைப் பொருந்தின ஞாதாக்கள்.

நி - வ - உ. பேரின்பமாகிய முத்தியினை யடைந்தாரும், அதற்கு நேரே காரணமாகிய சமாதியை யடைந்தாரும், மெய் ப்பொருளினை யொருகாலு நீங்குதல் செய்யார். அவ்வாறு வாக்நிறக்கும்படி அதனைப்பற்றி நில்லாதாரும்பிறப்பினை யற் றவர்.

உளையொழியப்பற்று மென்றதனால் கேட்டல் சிந்தித்தல் தெளிதலாகிய நிலையின்கண் நிற்பனென்பதாம். பிறப்பற்று மென்பது பதமுமுத்திகளை யடைவானென்பது கருத்து.

இதனால் மீட்டுமினையடைவாரது வகைமை கூறப்பட்டது.

உளையொழியப்பெற்ற தென்போல வென்னில் ?

பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவுமே
நீயொன்றுஞ் செய்யாம னில்.

எ - து. பேயொன்றுந் தன்மைபிறக்குமளவும் - பேய்பி டியுண்டவன் முன்னிலை வருமளவும்,—நீயொன்றுஞ் செய்யா மனில் - உனக்குக்குச்சிவாநுபூதி பிறக்குமளவு மான்மபோதஞ் சிவியாம லப்பொருளிலே நிற்பாயாக.

நி - வ - உ. பேய்பிடியுண்டோரது தன்மை யுனக்குண்டாமளவு நீ மேல் யாதொரு செயலுஞ்செய்யாதுசைவநிற்பாயாக.

பேய்பிடியுண்டோரது செயலெல்லாம் பேயின் செயலாறுபோல வுன்செயலேனத்தும் றுணையுன்செயலாமளவு வென்பதுகருத்து. பின்னாச் சாதனையின்றென்பதாம். இனியென்றதனுன் முன்னாச் செய்யவேண்டுவ வேனத்துஞ்செய்தது முற்றியதென்பதும் பின்னிலக்குச் செயலின்மையே வேண்டுவதென்பதுங் கண்டுகொள்க.

இதனுற் சமாதிசெய்வோர்க் கதுமுற்றிற்று வகையுமாறு கூறப்பட்டது. (எ

பொருள்பெறுவார் செயல்போல தென்போலன்னிலை

ஒண்பொருட்கு றுணைபோல றுணையாமே யல்லது

கண்படுப் போர் வகுப்பொருள்போற் கரவன்.

எ - து. ஒண்பொருட்கு றுணைபோற்று - சேயதன்னைத் வொருவருந்தெரிக்குந்து—உறுபயனேயல்லது - சேயலென்றுமே யல்லாமல் மற்றுமின்னிலையதன் செயலாகாத வென்னிலை—கண்படுப் போர் வகுப்பொருள்போற்கரவன் - நித்திரைபண்ணினவன் வகையிற் பதார்த்தமும் விழுங்குது வெளியதுபோல.

நி - வ - உ. தன்னியதாய மெய்ப்பொருளினை நு வம்மேலையதி லுலப்படாதார்க் கன்னிடத்தேயும் போன்பதேயன்றி மற்றுள்ள தியாகமுதலிய வெதழிலெவியரையும் உறுப்புசேர்வகையிற் சென்டம்போல வென்னெனத் தன்வயத்திலே நிற்குவகுத்த வறிதி. சாதிமே வலிதுநிற்ப தன்றெறுப்பதாம்.

இதனு லவர்சமயாசாரம் நீங்கு முறைமைகூறப்பட்டது.

கூடியதுங் கூறலாமோ வென்னில் ?

மூன்றுய தன்மை யவர்தம்மின் மிகமுயங்கித்
தோன்றுத வின்பமதன் சொல்.

எ - து. மூன்றுயதன்மை - ஒரு நூறு ஒரான தேயத்தோன் றுத விடத்திலே,—அவர்தம்மின் மிகமுயங்கி - அந்தச் சுவரின் டத்திலே மிகுதியும் பிரியப்பட்டு,—தோன்றுத வின்பமதன் சொல் - ஆன்மதோடாதத்தாலே யறியப்படாத பேரின்பத்தைச் சொல்லப்படாது.

நி - வை - உ. ஒரு நூறு ஒரான தேயமென்று மூன்றுவகைப் பட்ட தன்மையுள்ள சிவசிவபோகங்களிடத்தன்றித் தம்மின் மிகவுங் கூடியதலைப்பிறந்து பேரின்பத்தைச் செய்யாத வின்ப மவ்விடத் துவமைசொல்லத்தகுதியாகு.

இதனை லக்ஷணத்துமிகுதியின் அதிசயங் கூறப்பட்டது.

எக்ஷாறப்பொரு ளெய்துவ தென்னில் ?

இன்பி னினிதென்ற வின்புண்டே வின்புண்டா
மன்ற நிலையே யது.

எ - து. இன்பினினி தென்றல் - எல்லாவின்பத்துக்கு மேலானதேதெனிற் பேரின்பம், — இன்புண்டே வின்புண்டாம் - அந்தப் பேரின்பத்திலே சாத்தையுண்டானவர்களே யன்புநிலையுண்டாம், — அன்புநிலையது - ஞான சங்க மத்திலே பத்தியுண்டாகவே பேரின்பம் விளங்கி நிற்கும்.

நி - வை - உ. எல்லா வின்பங்களிலும் மினிமை யுடைத்தென் றும் சிறப்பித்துஞ் சொல்லப்படினும் பேரின்பமாவ தொருவற் கன்பென்ப திப்பொழுதுண்டாயி னிப்பொழுதே தியுளதாம் அது நிக்கவென்பினது நிலையே தனக்குநிலையாக வுடையதாகலான்.

இன்பென்றபொதுமையா லமிர்தநுகர்ச்சி முதலாயின வெல்லா மடங்கும் ஏகாரந் தேற்றம்.

இதனை லன்புடையார்க்கப்பேரின்ப மெனிதினெனைத்து மென்பது கூறப்பட்டது. (க0)

இன்புறுநிலை முற்றிற்று.

சு - வது. ஐந்தெழுத்தருணிலை.

அஃதாவது, ஐவகைப்பட்ட திருவெழுத்தாகிய அருளினது முறைமை. இதனையு மோர்திருவருளாகக் கூறியருளினர் வீட்டுநெறி காட்டுதலால்; அவ்வாறே சமாதியினை யடைதல்கூடாதார்க் கிதனை விதிப்படியோதவே யந்நிலை கூடுமாதலின் மேலை யதிகாரத்திலே டியைபுடைத்தெனக் கொள்க.

உளையிறந்த வின்பங் கூடாதாயின் மேலொருபாய மருளிச் செய்கிறார்.

அருணூலு மாரணமு மல்லாது மைமந்தின்
பொருணூ றெரியப்புகும்.

எ - து. அருணூலு மாரணமு மல்லாதும் - திருமையுடனே கத்தா வருளிச்செய்த விருபத்தெட்டாகமும் நாலுவே தமும் இதுகளல்லாமற் சொல்லப்பட்ட பலசாத்திரங்களு மென்னத்தைச்சொல்லு டென்னில்,—ஐந்தின் பொருணூ றெரியப்புகும் - பஞ்சாக்ஷரத்தி னுண்மையைச் சொல்லவந்தநூல்.

நி - வ - உ. சைவாகமங்களினது கருத்தினையும், வேதங்களினது கருத்தினையும், இவை யிரண்டுமல்லாத பலகலைகளினது கருத்தினையும் கற்றுவல்லோ ராராயப்புகுவாராயின்

அவையெல்லாந் திருவெழுத் தைந்தின் பொருளாகிய பதி பசு பாசங்களைச் சொல்லுநூல்களாம்.

இதனு லெல்லா நூற்பொருள்களும் இவ்வைந்தெழுத்தி னுள்ளே யடங்குமென்பது கூறப்பட்டது. (க)

இந்தப் பஞ்சாக்ஷர மென்னத்தைச் சொல்லுமென்னில்?

இறைசத்தி பாச மெழின்மாயை யாவி
யுறநிற்கு மோங்காரத் துள்.

எ - து. இறை - கத்தாவும்,—சத்தி - திருவருளும்,—பாசம் - ஆணவமலமும்,—எழின்மாயை - விளக்கமான திரோதானமும்,—ஆவி - ஆன்மாவும்,—உறநிற்கு மோங்காரத்துள் - பிரணவத்திலே நிற்கும்.

நி - வ - உ. சிவனும், சத்தியும், ஆணவமும், அழகுடைத்தாய மாயையும், ஆன்மாவும், ஆகிய ஐந்தும் ஐந்தெழுத்தோ டெழுத்தாகிய பிரணவத்தினுள்ளே யமைந்துநிற்கும்.

இதனால் பிரணவமென்று போற்பெற்றுநிற்கு நுண்ணிய வைந்தெழுத்தின தியல்பு கூறப்பட்டது.

இந்தப் பஞ்சாக்ஷரம் நிற்குந்தான மெங்ஙனே யென்னில்?

ஊன நடன மொருபா லொருபாலா
ஞானநடங் கானடுவே நாடு.

எ - து. ஊன நடன மொருபால் - மலமும் திரோதமு மொருபக்கலாகவும்,—ஒருபாலாஞானநடம் - அருளுஞ் சிவமு மொருபக்கலாகவும்,—தானடுவே - ஆன்மா விந்தவிரண்டுக்கு நடுவேநிற்பன்,—நாடு - அறிவாயாக.

நி - வ - உ. பிறப்பினைவிளைக்கு நகார மகாரங்களாகிய கூந்தொரு மருங்காகவும், வீட்டினை யுதவுஞ் சிகார வகாரங்க

ளாகிய கூத்தொருமருங்காகவும், யகாரமாகிய ஆன்மா இவ்விரு வகைக்கு நடிப்பட்ட தொன்முகவும் விசாரித்தறிவாயாக.

கூத்தென்றது உயிர்களைப் பெத்தமுத்திகளி லுய்த்து நடத்தலை.

இதனை லெந்தெழித்தின் பொருளியல்பு கூறப்பட்டது.(சு)

இந்தப் பஞ்சாக்ஷர மிருக்கையிலுலே · யான்மா நேயத்தைப் பெறுமலிருப்பா னேனென்னில்?

விரியமன மேவியவ்வை மீளவிடா சித்தம்
பெரியவினை தீரப் பெறும்.

எ - து. விரியமனமேவி - மனமானது பிரபஞ்சத்திலே விரிந்துபொருந்தி,—யவ்வைமீளவிடா - யவ்வாகிய வான்மாவை யருளிலுலே திருப்பாதபடி பண்ணுவிக்கும்,—சித்தம் பெரியவினைதீரப்பெறும் - ஆன்மாவுக்கு மகத்தாகிய புண்ணிய பாவமிரண்டுந் துலையொத்தவிடத்திற் போன்பமாகிய மோக்ஷமுண்டாம்.

சி - வ - உ. மகார நகாரமாகிய மலமும் திரோதமும் மிகவு மிறுகப்புணர்ந்து யகாரமாகிய வுயிர்களைத் திரும்பவிடா; அவ்வுயிர்கள் தம் பெரிய பிணியாகிய மலவிருள் தீருங்கால் சிகாரமாகிய சிவத்தினை யடையும்.

மலந்தீரவே திரோதந் தானே நீங்குமென்பதாம். விஜை என்பது ஈண்டுப் பிணியென்னும் பொருள்தந்து நின்றது.

இதனுற் கட்டுவீடென்னு மிரண்டும் ஐந்தெழித்திலுனை யமையுமென்பது கூறப்பட்டது. (சு

இந்தப் பஞ்சாக்ஷர மிருக்கையிலே யாணவமல நீங்காவிருப்பானே னென்னில்?

மாலார் திரோத மலமுதலாய் மாறுமோ
மேலாசு மீளா விடின்.

எ - து. மாலார்திரோதை மலமூதலாய்மாறுமோ - மயக்க மாகிய நகார மூன்றுகச்செபித்தான் மலநீக்காது. ஆனால் நீங்குகிறமுறைமை யெப்படியென்னில்?—மேலாசு மீளாவிடன்- ஆணவமலத்தைதக் கீழ்ப்படுத்தி நகாரமேற்படச் சிகாரமூன்றுக மாறிச்செபிக்கின் மோகூடுமாம்.

நி - வ - உ. மயக்கத்தினைப் பொருந்திய திரோதானமும் மலமுமாகிய நகார மகாரம் இரண்டும் ஆதிக்கண்ணதாக வுச்சரிக்கில், அவைகள் நீங்குமோ, இவற்றைக் கீழாக்கிச் சிவமாகிய சிகார மேலாம் வண்ணமாற்றி யுச்சரியாதொழியின்.

இதனால் நகார மகாரங்களை முதலாக வுச்சரித்து வழங்குவது வீட்டினையடைவோர்க் காகாதென்பது கூறப்பட்டது.

பஞ்சாக்ஷரத்தைச் செபித்த பேர்க்கு மலநீங்குமோவென்னில்?

ஆராதி யாதார மந்தோ வதுமீண்டு
பாராது மேலோதும் பற்று.

எ - து. ஆராதி - ஆராதனை பண்ணுவாய்,—ஆதாரம் - நமக்காதாரஞ் சிவனென் றறியாமலிருக்கிறதற்கு,—அந்தோ - ஐயோ,—அதுமீண்டுபோராது மேலோதும்பற்று - இப்படிச் சிகாரமூன்றுகச் செபித்தான் மலமுந் திரோதமு மிவனை வந்து பொருந்தாது.

நி - வ - உ. தமக்காதார மாறுகவெண்ணியவ்வா றுச்சரித்தலால் வரும்பழுதினைத் திரும்பிவிசாரியாம லந்தோ நகார மகாரங்களை மேலாகவுச்சரிக்கும் விருப்பம்.

இதனை லவ்வாறேறுவார் துணையின்றித் தன்புறுதற் கிரங்கிக்கூறப்பட்டது. (சு)

இந்தப் பஞ்சாக்ஷரத்தைச் செபிக்கிறதேதென்னில்?

சிவமுதலே யாமாறு சேருமேற் றீரும்
பவமிதுநீ யோதும் படி.

எ - து. சிவமுதலேயாமாறு சேருமேல் - இப்படிச் சிகார முன்னுகச் செபித்தாயானுல்,—தீரும்பவம் - சாகமுநீங்கும்,—இதுநீயோதும்படி - இதுநீ சபிக்கப்பட்ட முறைமை. (எ)

நி - வ - உ. சிகார வகாரமென்னு மிரண்டு மாதிக்கண்ணே தையாம்வண்ண முச்சரித்தல்கூடுமாயின், அந்நிலையே யுனது பிறவித்துன்பநீங்கும், மாணவகனே! வீட்டினைக்காமுற்றநீ யுச் சரிக்கு முறைமையிது.

இதனுல் முத்தரோதுமாறு கூறப்பட்டது.

இப்படி சபிக்கப்பட்ட வான்மாக்களுக்குப் பிரயோசன மேதென்னில்?

வாசி யருளியதை வாழ்விக்கு மற்றதுவே
யாசி லுருவமுமா மங்கு.

எ - து. வாசியருளியதை வாழ்விக்கும் - வகாரமாகிய திரு வருள் யகாரமாகிய வான்மாவை சிகாரமாகிய சிவத்திலே கொ டுத்துப் பேரின்பமாகிய சுகத்தை யுண்டாக்கும்,—மற்றதுவே யாசிலுருவமுமாமங்கு - அந்தத் திருவருள்தானே குற்றமில் லாத திருமேனியாயிருக்கும் அந்தவான்மாவுக்கு.

நி - வ - உ. அவ்வா றுச்சரிக்குங்கால், வகாரமாகிய வருள் சிகாரமாகிய சிவத்தினைக் காட்டி யகாரமாகியவுயிரினை வீட் டின்பத்திலே யிருத்தும். அன்றியும் அவ்வருளே யந்தச்சிவத் திற்குக் குற்றந்தீர்ந்த திருமேனியாயிருப்பது.

இதனுற் திருவெழுத்தைந்தில் வகாரமாகிய வருளினது தன்மை வகுத்துக் கூறப்பட்டது. (அ)

அந்தவான்மா மோகூத்திலேயிருக்கிற தெப்படி யென் னில்?

ஆனவா நாப்ப ணைடையா கருளினுல்
வாசியிடை நிற்கை வழக்கு.

எ - து. ஆசினவா நாப்ப ணைடையாது - குற்றத்தைப் பொருந்திய நகாரத்திலு மகாரத்திலும் பொருந்தாமல்,—அருளினுல் - ஆசாரியனுடைய கிருபையினுல்,—வாசியிடை நிற்கைவழக்கு - அருளுக்குஞ் சிவத்துக்கு நடுவே நிற்கிறதே முறைமை.

நி - வ - உ. குற்றந்தீர்ந்த திரோதானமும் அருளுமாகிய நகார வகாரங்கட்கு நடுப்பட்டு நில்லாது வகாரமாகிய வருளினுலே யகாரமாகிய வுயிர் அவ்வகாரத்திற்குஞ் சிவமாகிய சிகாரத்திற்கு நடுப்பட்டுநிற்பது முறைமை.

அவ்வா றதற்செழுத்துக்களுமாறி யுச்சரிப்பது குருமுகத்தாற் றெளிந்து கொள்க. ஆன்மாவைமறைக்கும் பாசங்களைச் செலுத்துவதன்றி திரோதானசத்தி தானுகமறையா தென்பதற்கு ஆசினவென் றருளிச்செய்தார்.

இதனுற் றிருவெழுத்தினைக் கூறிய முறைமையிலே துவா ரடைந்துநிற்கு நிலை கூறப்பட்டது. (கூ)

ஆசினவா என்பதற் கிருவகை யுரையாசிரியர் கூறிய பேதங்களை யுகித்தறிக.

மோக்ஷத்திலே யிருக்கிறதற்குப் பிரத்தியக்ஷமுண்டோ வென்னில்?

எல்லா வகையு மியம்பு மிவனகன்று
நில்லா வகையை நினைந்து.

எ - து. எல்லாவகையு மியம்பும்- வேதாகமங்களெல்லாஞ் சொல்லுகிற தேதென்னில்,—இவனகன்று நில்லாவகையை நினைந்து - ஆன்மா சிவசத்தியினை விட்டுநீங்காத முறைமையைச் சொல்லும்.

நி - வ - உ. எவ்வகைப்பட்ட வுபாயங்களினையு நூல்களு னைக்கும், இவ்வாருன்மாவானவன் சிவசத்தியினை நீங்கிநில்லா துடனுய்நிற்குந் திறத்தினைக் கருதி.

இதனை லறியுநெறிமுதல் இவ்வதிகாரமீரு ன கான்கதிகா ரத்தினது கருத்துந் தொகுத்துக் கூறப்பட்டது. (க0)

ஐந்தெழுத்தருணிலை முற்றிற்று.

க0-வது. அணைந்தோர்தன்மை.

அஃதாவது, இவ்வகைப்பட்ட சமாதியினை யடைந்தோ ரதுதன்மை. மேலையதிகாரங்களாற் சமாதிகூடுமுறைமைகூறி யது கூடினுரது தன்மை யிதனுற் கூறுதலின், அவற்றே ழுதற் கியையபுடைத்தெனக் கொள்க.

நேயத்தை விட்டுநீங்காத நாதாக்கணினை வேதென்னில்?

ஓங்குணர்வி னுள்ளொடுங்கி யுள்ளத்து ளின்பொ
தூங்குவர்மற் றேதுண்டு சொல். [டுங்கத்

எ - து. ஓங்குணர்வி னுள்ளொடுங்கி யுள்ளத்து ளின்பொ டுங்க - மகத்தாகிய சிவத்திலே யான்மாவொடுங்க ஆன்மாவிலே சிவமொடுங்க,—தூங்குவர் - பேரின்பந் தானுகவழங்குவர்,— மற்றேதுண்டுசொல்-நேயமேயல்லது மற்றொருநினைவுமில்லை.

நி - வ - உ. நிறைந்த ஞானத்தினுள்ளே தாம் அடங்கித் தம்மறிவினுள்ளே பேரின்பமடங்கும்படி யாகந்த நித்திரைப ண்ணுநிற்பர், மற்றவார்த்தையாதுளதாம்.

அவ்வின்பம் இறைவற்கின்றி யுயிர்கள் தாமேநுகர்தலின் உள்ளத்தி லின்பொடுங்கவென்றும், நேயத்தழுந்தினு ஞானத்

தின்மிக்கா ரன்றென்பதற்கு ஓங்குணர்வினுள்ளடங்கியென்று மருளிச்செய்தார்.

இதனு லவர்ஞெயத் தழுந்திநிற்கு மியல்பு கூறப்பட்டது

இப்படி நின்றவர்கள் மேலான பதங்களேயும் விரும்புவார் களோ வெண்ணில்?

ஐந்தொழிலுங் காரணங்க ளாந்தொழிலும் போக
வெந்தொழிலு மேவார் மிக. [நுகர்

எ-து- ஐந்தொழிலும் - பஞ்சகிருத்தியமும்,—காரணங் களாந் தொழிலும் - காரணேசுரர் தொழிலாகிய சாலோகாதி பதங்களேயும்,—போகநுகர் வெந்தொழிலும் - போகத்தைக் கொடுக்கத்தக்க கொடிதாகிய சுவர்க்காதி பதங்களேயும்,— மேவார்மிக - மிகவும் பொருந்தார்கள்.

நி-வ-உ. பரமசிவனுற் செய்யப்படும் படைப்பு நிலை யீறு மறைப்பு அருளென்னும் ஐந்தொழில்களேயு மொருங்கே செய்தலும், அயன் மால் உருத்திரன் மகேசன் சதாசிவனென் னும் மிவரிலொருவற்கு மொரோவொரு தொழிலேச்செய்த லும், மாயாபோகத்தினேயருந்தும் பிறப்பிற்கேதுவாகிய வெய் யதொழிலினேச் செய்தலுஞ் சிறிதும் பொருந்தாரவர்.

அசஞ்சலமா யகண்டமா யொழிவற நிறைந்த ஞானவடி வினராய்நின்றும் பரமானந்தத்தினே யனுபவித்திருக்கு மொன் றிற்குமே யுரியாவென்பது கருத்து. மிகவென்பது குறிப்பு மொழியாய்ச் சிறிதுமென்னும் பொருள்விளக்கநின்றது. "உயிர்தானுஞ் சிவாநுபவ மொன்றினுக்கு மூரித்தே" என் றருளிச் செய்தவாறு காண்க.

இதனுலவர் மற்றொரு தொழிற்கு மூரியாரல்ல ரென்பது கூறப்பட்டது. (உ)

சர்வஞ்ஞத்து வாதிகுணங்கள் வந்து பொருந்திறலோ வென்னில் ?

எல்லா மறியு மறிவுறினு மீங்கிவரொன்
றல்லா தறியா ரற.

எ - து. எல்லா மறியு மறிவுறினும் - சருவஞ்ஞத்து வா திகுணங்கள்வந்து பொருந்திறலும்,— ஈங்கு - இவ்விடத்தி லே,—இவர் - இந்த நாதாக்கள்,—ஒன்றல்லா தறியாரற - நே யமொன்றுமே யல்லது மற்றொன்றையும் பொருந்தி யறியமா ட்டார்கள்.

நி - வ - உ. இயல்பினன் முழுவதூஉ மூணருஞானமா னது வெளிப்பட்டுத் தம்மையிரண்டறக் கலந்து நிற்பினு மிவ் விடத் திந்தச் சிவன்முத்தரானவ ரானந்த ஞானமொன்றுமே யன்றிப் பிறிதொரு பொருளினையுஞ் சிறிது மறிதல்செய்யார்.

அற என்பது மிகவென்பதுபோலக் குறிப்புமொழியாய் நின்றது. சிவன்முத்தர் சிவ மொன்றுமே யன்றிப் பிறிதொ ன்று மறியாராகவே பரமுத்தரு மவ்வாறுதல் கூறவேண்டாவா றுயிற்று.

இதனுலவர் பிறிதொன்றுமறியா தெவ்விடத்துஞ் சிவமே கண்டிருத்தல் கூறப்பட்டது. "பரஞானத்தால்" என்பதனுள் 'சிவன்முத்தர் பரமே பார்த்திருப்பார்" என் றருளிச்செய்த, வாறு காண்க. (கூ)

இப்படிக்கொத்த நாதாக்களை விடயங்கள்வந்து பொருந்தி றலோ வென்னில்?

புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவர் போதார்
தலைடக்கு மாமை தக.

எ - து. புலனடக்கித் தம்முதற்கட் புக்குறுவர் - விடயங் கள் வந்து பொருந்திறற் றமக்குப் பிராணனுகிய நேயத்திலே

யடங்கி நிற்பார்கள்,—போதார் - ஒருவிடயத்திலுங் கர்மித்துப் புரியார்கள். அஃதென்போல வென்னில்?—தலநடக்கு மாமைமதக - பூமியிலே நடக்கப்பட்ட வாமையானது ஆரவாரமில்லாதவிடத்திலே நடக்கும், ஆரவாரமுள்ள விடத்திலேயடக்கு மதுபோல.

நி - வ - உ. ஓர்விடய மெதிரிடுங்கால் அதற்கஞ்சி யதன்மேற்செல்லுந் தம்முணர்வினை மாற்றித் தமதுமுதலாகிய ஞேயத்தினிடத்திலே புக்குப்பொருந்தி மறித்து நீங்குதல் செய்யார், அவர் பூமியின்கண்ணே நடந்துசெல்லுங்காலொருவனொதிர்ப்படி னவனையஞ்சித்தன் றலையினைச்சுரித்துள்ளே வாங்கி யடைசவறக்கிடக்கு மாமையினை யொப்ப.

ஆமை பின்னொதிர்ந்தோரகலுங்காற் றன்றலையினை வெளிப்படுத்திச் செல்லுமதுபோலிவர் வினைவிற்றிரிபு படாமையிற் போதானென் றருளிச்செய்தார்.

இதனுலவர் புலனுணர்வுக்கஞ்சியகலுமாறு கூறப்பட்டது.

அப்படிச்சிலர் நேயத்தைவிட்டு நீங்கியிருப்பர்களோ வென்னில்?

அவனெயகன் றெங்கின்ரு மாங்கவனு யெங்கு
மிவனெயொழிந் துண்டாத லில்.

எ - து. அவனெயகன் றெங்கின்ரு மாங்கவனுய் - அந்தச் சிவனை விட்டுநீங்கி யான்மாவுக் கிருக்க விடமில்லை. அந்தச்சிவன்ரு னுய், —எங்கும் - சட சித்துக்களெல்லாம், —இவனை யொழிந் துண்டாதவில்-இந்தச்சிவனையல்லா தான்மா நில்லாது.

நி - வ - உ. இறைவனைநீங்கி யெவ்வுலகமு நிற்பதில்லை, அதுபோல விறைவனுதலடைந்த விம்முத்தான்மாவையன்றி யெவ்விடமுமுளதாய் நிற்றலில்லை.

இவனு மிறைவனைப்போல வியாபகனுய் நிற்குமென்ப தாம். "காயங்கழிந்தக்கா லெங்குமாய்க் கருத்தாப்போல்நிற் பன்" என்றருளிச் செய்தவாறு காண்க.

இதனு லவர்சிற்றறிவுநீங்கிப் பேரறிவுடைய ரென்பது கூறப்பட்டது. (நு)

ஆனுல் அந்தப் பொருளை யுள்ளே கண்டிருப்பார்களோ புறம்பே கண்டிருப்பார்களோ வென்னில்?

உள்ளும் புறம்பு மொருதன்மைக் காட்சியருக்
கெள்ளுந் திறமேது மில்.

எ - து. உள்ளும் புறம்பும் - அந்தரங்கத்திலே யறிவாய் விளங்கி யிருக்கப்பட்ட திருவருளையும், புறம்பேகுருவாகித் திருமேனி கொண்டுவந்த வாசாரியனையும்,—ஒருதன்மைக் காட்சியருக்கு - ஒருபொருளென்று தரிசித்தவர்களுக்கு,—எள்ளுந்திறமேதுமில் - உள்ளென்றும் புறம்பென்று நீக்கவிட மில்லை.

நி - வ - உ. அகமும்புறமு மொருதன்மைத்தாய் நிற்கு ஞானத்தினை யடைந்தோருக் கொன்றனை யிகழ்ந்திடும்வண்ண மெவ்வாற்றனு மில்லை.

இதனு லவர்க் கெல்லாப்பொருள்களு ஞானமாயே தோன் றுதல் கூறப்பட்டது.

வேறு. ஆறு லிந்திரியங்களினு லறியு மறிவாலுஞ் சிவ னைத் தரிசிக்கலாமோ வென்னில்? தனக்குப் பிராணனுய்நின் றுபகரிக்கிற தன்மையையு மவ னவ ளதுவாய்நின் றுபகரித் தும் பின் பாசாரிய மூர்த்தியாய்நின்று மிரகூஷிக்கிற பூரண மான பொருளை, விசுவமானது மறையும்படி யொருநீர்மையா கக் கண்டவர்களுக்குச் சிவனது திருவடியை நீங்குகைக்கு வழியில்லை.

இது ஞானவான்கள் பிரபஞ்சம் தோன்றுமனிற்குமுறைமை. (சு)

ஆஞலிப்படி நீக்கமறநிற்கிற நாதாக்களுந் தொழிற்படுவார்களோ வென்னில்?

உறுந்தொழிற்குத் தக்க பயனுலகந் தத்தம்
வறுந்தொழிற்கு வாய்மை பயன்.

எ - து. உறுந்தொழிற்குத்தக்க பயனுலகந்தத்தம் - உலகத்திலே யிருக்கப்பட்ட வான்மாக்கள் செய்தவேலைக்குத்தக்க கூலிகொடுப்பார்கள். அதுபோல, — வறுந்தொழிற்கு வாய்மைபயன் - தொழிலற்ற நாதாக்களுக்குச் சத்தியமாகிய சேயமொன்றுமே பிரயோசனம்.

நி - வ - உ. தன்னேபாற்றிய தலைவனைப் பின்றொடர்ந்து சூழும் யானைனதென்னுஞ் செருக்காற் செய்யப்பட்ட வினைக்கேற்ற பயனுவ துல்கவாழ்க்கைகள், செருக்கினேநீங்கித் தம்மை யிகழ்ந்தோர்செய்யுந் தானந்தவமுதலிய தொழிற்குவரும் பயனுவ தழிவில்லாத வீட்டின்பமே.

தக்கபய னென்றதனுல் பயன்பலவாயிற்று. வறுந்தொழி லென் றருளிச்செய்தார், தொடர்ந்துபயன் வழங்காமையின். இதனு லவரோர்தொழிலினேச் செய்யினும் பிறிதொருகாமி யத்தினைக் கருதிச்செய்யாரென்பது கூறப்பட்டது.

வேறு. ஆனல் தொழிலாலுஞ் சிவனைக் கூடலாமோவென்னில்? பிரபஞ்சத்திற் தத்தந்தொழிலுக்குத்தக்க பிரயோசனங்களிவர்களுக்குண்டோ மாறுபோல வொன்றுஞ் செய்யாத செயலுக் கந்தவுண்மை பிரயோசனம்.

இந்த வுண்மையிலே நின்றவர்களுக் கொருசெயலுங் கூடாதென்ப தறிவித்தது. (எ)

பிராரத்துவம் புசிக்கச்செய்தே யாகாமிய மேறுதோ வென்னில்?

என்ற வினையுடலோ டேகுமிடை யேறும்வினை தோன்றி லருளே சூடும்.

எ - து. என்றவினையுடலோடேகும் - பிராரத்தம் தேகத்துடனேபோம், சஞ்சிதம் நீட்சையிலேபோம்,—இடையேறும் வினைதோன்றி லருளேசூடும் - பிராரத்தம் புசிக்கச்செய்தே கட்டுப்படுகிற வாகாமியஞ் சிவஞானம் விளங்கவே நீங்கும்-

நி - வ - உ. பக்குவப்பட்டமைந்த வினையான தூடம்பிற் கமைத்த காலவளையறையிலே தொலையும், இடைப்பட்டகாலத்தில்வந்து பொருந்தும்வினைக ளுளவாயினருளென்று கருப்பிலேவெந்துபோம்,

சஞ்சிதம் நீங்காமல் ஞானம் வெளிப்படாது, வெளிப்படாதாகவே யாகாமியந் தீர்வதில்லை, அதனை யருளேசூடுமென்பதனாற் சஞ்சிதமும் நீங்கிற்றென்பது தானேபோதருமெனக் கொள்க. தோன்றி லென்பதனை லதுதோன்றுதவண்ணமிடை யறுதருளோடு நிற்பொன்பது கருத்து.

இதனை லவர்க்கு வினைத்தொடர்பின்றுமாறு கூறப்பட்டது.

வேறு. சஞ்சிதகன்மம் நீசையுகயிலேபோம், பிராரத்தம் தேகத்துடனேபோம், ஆகாமியம் சிவஞானத்தினாலே சுடப்படும்.

இது ஞானவான்களுக் கொருகன்மமுமில்லை யென்று மிடமறிவித்தது. (அ)

பரமுத்தி சரீரநீங்கியோ வென்னில்?

மும்மை கருவினைகண் மூளாவா மூகறிவார்க் கம்மையு டம்மையே யாம்.

எ - து. மும்மை தருவினைகண் மூளாவாம் - சஞ்சித பிரா ரத்த மாகாமிய மிந்தமூன்றுவினையும் பொருந்தாவாம். என் பொருந்தா வென்னில்?—மூதறிவார்க் கம்மையுமிம்மையே யாம் - மேலாகிய சிவஞானத்தைதப்பெற்ற நாதாக்க ளிச்சரீராந் தத்திலே பெறப்பட்ட பாமுத்தியுஞ்சரீர மிருக்கையிலேயாம்.

நி - வ - உ. இம்மை யம்மை மறுமையென்னு மூவகைப் பயனையுந்தரும் வினைகள்யாவுந்தொடரா, தம்மேலாய வறிவி னையுடையார்க்கும் பிறந்தெய்து மின்பமு மதனேடு சூடிநிற் கவே யுளதாமாகலான்.

இம்மை யிப்பிறப்பு, அம்மை மேலுலகினையடைதல், மறு மை மறித்து வரும்பிறப்பு. உடம்பிறந்தகாலத்து நிலைவேறு படுதலின்மைநோக்கி யம்மையு மிம்மையேயாமென் றருளிச் செய்தார்.

இதனை லவர்க்குச்சிறிதும் வினைத்தொடர் பின்றென்பது வலியுறுத்தப்பட்டது.

வேறு. அந்தப் பிராரத்தம் புசிக்க வேண்டுமாயின், வாக் குமனங்காயங்களி லுண்டானகன்ம மவர் சிவசம்பாவனை யாலே யவர்களை வாதியாது, பின்புண்டாஞ் சாயுச்சியமு மவர் களுக் கிப்பொழுதேயாம்.

இது சீவன் முத்தரான நிலையிலே தன்னிலே பாமுத் தியா மென்றறிவித்தது. (கூ)

இவர்களுக் கான்மாக்களை யிரட்சிக்கவேணுமென்கிற கிரு பையில்லையோ வென்னில்?

கள்ளத் தலைவர் தூயர்கருதிக் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக.

எ - து. கள்ளத்தலைவர் தூயர்கருதி - கவட்டிடங்கியங்க ளுக்கு மூதன்மையா யிருக்கிற வான்மாக்கள்படுகிற துன்பத்

தைத் திருவுள்ளத்திலே நினைத்து,—தங்கருணை வெள்ளத்தலை வர்மிக - தமக்குக்கிருபையாகிய ஞானசமுத்திரத்திலே மிகுதி யுமழுந்திநிற்பர்கள்.

நி - வ - உ. யானெனதென்னும் வஞ்சத்தலைமையினையு டைய வான்மாக்கள் படுந்துன்பத்தினை யெண்ணித் தம்மிடத் தெழுந்த கருணையாகிய கடலினுள்ளே மிகவு மலைதலைச் செய்வர்.

அலைத லிரக்கத்தாற் றளர்தல்.

இதனு லவர் வீட்டினைவிரும்பாத வுயிர்கள்மாட்டிறை வன்போ லருளுடையராதல் கூறப்பட்டது.

வேறு. ஆனல் ஞானவான்களுக்கு விடயங்களுடன் கூடி நிற்கலாமோ வென்னில்? இந்திரியங்களுடன் கூடினலுண்டான கிலேசத்தையுணர்ந்து சிவனுடைய கிருபாசமுத்திரத்திலே விழுந்து தஞ்செயலற் றதுவதுவாய் விடுவார்கள்.

"மறையோன், கழுமலமுதுபதிக் கவுணியன் கட்டுரை, கழுமலமுதுபதிக் கவுணியனறியு, மனையதன்மையை யாதலி னின்னை, நினையவல்லவ ரில்லைநீணிலத்தே" என்றவாறு காண்க. (கo)

அணைந்தோர்தன்மை முற்றிற்று.

திருவருட்பயன் மூலமுமுரையும் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.